அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 12/95

எனது இல. 11-2/9/361/5(எச்)2
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு 07.
1995, மார்ச் மாதம் 17 ஆந் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள் அனைவருக்கும்.

1979 இன் 48 ஆம் இலக்கப் பயங்கரவாதத் தடுப்புச் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழும் அவசரகால சட்டத்தின் கீழும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட உத்தியோகத்தர்களை/ஊழியர்களை மீண்டும் பதவியில் அமர்த்துதல்.

மேற்படி விடயம் சம்பந்தமாக வெளியிடப்பட்டுள்ள 1989.10.06 ஆந் தேதிய 48/89 ஆம் இலக்கமிடப்பட்டதும் 1991.04.10 ஆந் தேதிய 48/89(1 ஆம் இலக்கமிடப்பட்டதுமான அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைக்களுக்குப் பதிலாக இச்சுற்றறிக்கை வெளியிடப்படுகிறது.

02. தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக (ஆரம்ப விசாரணையொன்றின் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு) நடாத்தப்படும் முறைசார் விசாரணையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வகுதிகளைச் சேர்ந்த அரச உத்தியோகத்தர்களை/ அரச கூட்டுத்தாபனங்களின் ஊழியர்களை மீண்டும் அவர்களுக்குரிய பதவியில் அமர்த்த வேண்டும்.

(1) 1979, இன் 48 ஆம் இலக்கப் பயங்கரவாதத் தடுப்பு(தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் அல்லது/அவசரகால ஒழுங்கு விதியின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டும் சான்று இல்லாக் காரணத்தினால் விடயத்திற்குரிய அமைச்சரினால் அல்லது பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் விடுவிக்கப்பட்ட அல்லது அவசரகால ஒழுங்கு விதிகள் 18 அல்லது 19 இன் கீழ் பொலிஸ் மாதிபரால் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு அல்லது தடுத்து வைக்கப்பட்டு விசாரணை முடிவில் அவரால் விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் / ஊழியர்கள்.

..6